# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## அரசினர் உயர்நிலைப் பள்ளி, சோழவரம் - வேலூர்

## பத்தாம் வகுப்பு - தமிழ்

**I. பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க)**

**1.**மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்? மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே ________.

அ) திருப்பதியும் திருத்தணியும் ✓
ஆ)திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும்
ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

**2.** இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ________.

அ) நாட்டைக் கைப்பற்றல்
ஆ)ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ✓
ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**3.** சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ________.

அ) அகவற்பா ✓
ஆ) வெண்பா
இ) வஞ்சிப்பா
ஈ) கலிப்பா

**4.** மேன்மை தரும் அறம் என்பது

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது ✓
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

**5.** தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது

அ) திருக்குறள்
ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம்
ஈ) சிலப்பதிகாரம் ✓

**6.** சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க

அ) உழவு, மண், ஏர், மாடு
ஆ)மண்,மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ✓
ஈ) ஏர், உழவு, மாடு, மண்

www.Padasalai.Net

**7.** உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்

அ) உதியன், சேரலாதன்
ஆ) அதியன், பெருஞ்சாத்தன் ✓
இ) பேகன், கிள்ளிவளவன்
ஈ) நெடுஞ்செழியன, திருமுடிக்காரி

**8.** காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர்

அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது ✓
ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
இ) இகழ்ந்தால் இறந்து விடாது என் மனம்
ஈ) என் மனம் இறந்து விடாது இகழ்ந்தால்

**II) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி.**

**9.** வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

i) பழைய புத்தக கடையில் புத்தகம் வாங்குதல்.
ii) உணவுக்கான பணத்தில் புத்தகம் வாங்குதல்.

**10.** பாசவர், வாசவர் பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

பாசவர் - வெற்றிலை விற்போர்.
வாசவர் - நறுமணப் பொருள் விற்போர்.
பல்நிண விலைஞர் - இறைச்சிகளை விற்பவர்.
உமணர் - உப்பு விற்பவர்.

11. "கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது"

**அ) அடியெதுகையை எடுத்தெழுதுக.**

அடிஎதுகை: கொள்வோர் - உள்வாய்

**ஆ) இலக்கணக்குறிப்பு எழுதுக:**

கொள்க - வியங்கோள் வினைமுற்று
குரைக்க - வியங்கோள் வினைமுற்று

**12.** குறிப்பு வரைக: அவையம்

i) அறம் கூறும் மன்றங்கள்.
ii) துலாக்கோல் போல் நடுநிலையானது.
iii) மதுரையில் மதுரைக்காஞ்சி அவையம்.

**13.** புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

www.Padasalai.Net

i) வெட்சி - கரந்தை
ii) வஞ்சி - காஞ்சி
iii) நொச்சி உழிஞை

**14.** கலைச்சொல் எழுதுக

அ) **Document** - ஆவணம்
ஆ) **Belief** - நம்பிக்கை

**15.** மரபுத் தொடரை தொடரில் அமைத்து எழுதுக :

அ) கண்ணும் கருத்துமாக:
தமிழ்ச்செல்வன் கண்ணும் கருத்துமாய் படித்து போட்டித் தேர்வில் வெற்றி பெற்றான்.

ஆ) ஆறப்போடுதல்:
கோபத்தை ஆறப்போடுதல் வேண்டும்.

**III.** எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

**16. "**தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்**"** - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

இடம்: மாநகர தந்தை செங்கல்வராயன் தலைமை - மாநகராட்சி சிறப்புக் கூட்டம்

பொருள்: மொழி வாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது ஆந்திராவின் தலைநகர் சென்னை இருக்க வேண்டும் என்ற நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒருநபர் ஆணையத்தை எதிர்த்து முழங்கிய முழக்கம் இது.

விளக்கம்: இதன் பொருட்டு மா.பொ.சி. சென்னையை மீட்க தலைக்கொடுத்தேனும் தலைநகர் காப்போம் என முழங்கினார்.

**17.** ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

i) அகவல் ஓசை பெற்று வரும்.
ii) ஈரசைச்சீர் குறைவாக காய்ச்சீர் மிகுதியாக வரும்.
iii) ஆசிரியத்தளை மிகுதியாக வரும்.
iv) வெண்டளை, கலித்தளை விரவி வரும்.
v) மூன்றடி முதல் எழுதுபவர் மனநிலைக்கு ஏற்ப முடியும்.
vi) ஏகாரத்தில் முடிவது சிறப்பு.

*18.* "பகர்வனர் திரிதிரு நகரவீதியும்
பட்டினும் மயிரினும் பருத்திநூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"

அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?
சிலப்பதிகாரம்

ஆ) பாடலில் அமைந்த எதுகை, மோனையை எடுத்து எழுதுக.

மோனை:

புகர்வனர் - புட்டினும்
தூசும் - துகிரும்

எதுகை:

பட்டினும் - கட்டு
பதர்வனர் – நதர

இ) இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?
சந்தனம் , அகில்

**19. "**மாற்றம் எனது மானிடத் தத்துவம்**"** எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடலை அடி மாறாமல் எழுதுக.

"மாற்றம் எனது மானிடத் தத்துவம்;
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்து ஏகுமென் சாலை!
தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!
கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது;
நானே தொடக்கம்; நானே முடிவு;
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!"
- கண்ணதாசன்

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**20.** உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

அனுப்புநர்

அஅஅஅ,
100, பாரதி தெரு,
முருகன் நகர்,
வேலூர் - 632 002.

பெறுநர்

மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
வேலூர் - 632 015.

ஐயா,

பொருள்: மின்விளக்கு சரி செய்ய வேண்டுதல் - சார்பு

வணக்கம். எங்கள் தெருவில் 100 குடும்பங்கள் உள்ளன. எங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன. எனவே பழுதடைந்த

www.Padasalai.Net

மின்விளக்குகளை சரி செய்து கொடுக்க வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

இடம்: வேலூர்
நாள்: 14-11-2023

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அஅஅஅ

<u>உறைமேல் முகவரி:</u>

பெறுநர்
மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
வேலூர் - 632 015.

**21.** தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி தமிழ் எண்ணுரு தருக.

முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவு போல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப் பெருமை சாற்றுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முப்பால் | = | மூன்று | + | பால் | (ங) |
| ஐந்திணை | = | ஐந்து | + | திணை | (ரு) |
| நானிலம் | = | நான்கு | + | நிலம் | (ச) |
| அறுசுவை | = | ஆறு | + | சுவை | (சு) |
| பத்துப்பாட்டு | = | பத்து | + | பாட்டு | (க0) |
| எட்டுத்தொகை | = | எட்டு | + | தொகை | (எ) |

**22.** காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :

"ஏடு எடுத்தேன் கவி ஒன்று எழுத..!
என்னை எழுது என்று சொன்னது இந்தக் காட்சி..! கொடுப்பவன் என் கொடையைப் பற்றி எழுது என்றான்..!
பெறுபவன் என் வறுமையைப் பற்றி எழுது என்றான்..!
நான் எழுதுகிறேன் கொடையை தடுக்காதே என்று..!"

<u>அலகிடுதல் செய்க:</u>

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

| | | | | |
|---|---|---|---|---|
| குற் \| றம் | = | நேர் \| நேர் | = | தேமா. |
| இல \| னாய்க் | = | நிரை \| நேர் | = | புளிமா. |
| குடி \| செய் \| து | = | நிரை \| நேர் \| நேர் | = | புளிமாங்காய். |
| வாழ் \| வா \| னைச் | = | நேர் \| நேர் \| நேர் | = | தேமாங்காய். |
| சுற் \| றுமாச் | = | நேர் \| நிரை | = | கூவிளம். |
| சுற் \| றும் | = | நேர் \| நேர் | = | தேமா. |
| உலகு | = | நிறைபு | = | பிறப்பு. |

www.Padasalai.Net

## V. விரிவான விடையளிக்க.

**23.** அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு.

1.மருவூர்ப்பாக்க வணிக வீதி - இக்கால வணிக வளாகங்கள்.
2.தானியக் கடைத் தெருக்கள் - தனித்தனி அங்காடிகள்.
3.நேரடி வணிகம் - இடைத் தரகர்கள் அதிகம்.
4.இலாப நோக்கமற்றது - இலாபம் மட்டுமே முக்கியம்.
5.கலப்படம் இல்லாதது - கலப்படம் கலந்துள்ளது.
6.தரம் உண்டு.விலை குறைவு - விலை அதிகம்.

ஆ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும் குறித்து எழுதுக.

நாம் செய்ய வேண்டிய அறங்கள்:

1. தீய சொற்களை பேசாதிருத்தல்
2.பழிவாங்கும் எண்ணத்தை கைவிடல்
3.உண்மை பேசுதல்
4.உதவி செய்தல்
5.அன்பாய் இருத்தல்

அறம் தரும் நன்மைகள்:

1.தேவையற்றச் சண்டைகள் நீங்கும்.
2.மன அமைதிப் பெறலாம்.
3. நம் வாழ்வை உயர்த்தும், அச்சமின்றி வாழலாம்.
4. மன மகிழ்ச்சி கிடைக்கும்.
5. அனைவரும் நண்பராகிவிடுவர்.

www.Padasalai.Net